எதிரிகளின் சக்கர வியூகத்தில் சிக்குகின்ற அபிமன்யு அல்ல எங்கள் முதல்வர்!

விரல் சக்கரத்தால் வியூகங்களை உடைக்கும் கிருஷ்ண பரமாத்மாவைப் போன்றவர்!

பேரவையில் - மானியக் கோரிக்கைக்கான பதிலுரையில் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணர்ச்சிப் பெருக்குடன் உரை!

சென்னை, ஏப். 18-

"எதிரிகளின் சக்கர வியூகத்தில் சிக்குகின்ற அபிமன்யு அல்ல எங்கள் முதல்வர்! விரல் சக்கரத்தால் வியூகங்களை உடைக்கும் கிருஷ்ண பரமாத்மாவைப் போன்றவர் எங்கள் முதல்வர் அவர்கள்" என்று சட்டப்பேரவையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் தமது மானியக் கோரிக்கைக்கான பதிலுரையில் உரையாற்றும்போது கூறினார்.

நிறைவாக ஒருசில கருத்துகளோடு என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

ஆயிரக்கணக்கான ஆலயங்களின் கோபுர கலசங்கள் அனைத்தும் திராவிடச் சூரியனால் ஒளிபட்டு மின்னுகின்றன. அதனால் ஆண்டவனின் ஆதரவோ எங்கள் முதல்வருக்குத் தான் என்று சொல்லுகின்றன.

கம்பர் இருந்திருந்தால் திராவிட காவியம் செய்திருப்பார்!

எங்கள் முதல்வரின் பொற்கால ஆட்சியைப் பற்றி கம்பர் இருந்திருந்தால், திராவிட காவியம் செய்திருப்பார்; வள்ளுவர் இருந்திருந்தால், புதுக்குறள் புனைந்திருப்பார்; இளங்கோ இருந்திருந்தால், சமூக நீதி காப்பியம் வடித்திருப்பார்; பாரதியார் இருந்திருந்தால், புதுக்கவிதை ஆயிரம் பாடியிருப்பார்; பாரதிதாசன் இருந்திருந்தால், கொள்கை விளக்கு இயற்றியிருப்பார்; பெரியார், அண்ணா, கலைஞர் இருந்திருந்தால், கைதட்டி ஆரவாரம் செய்திருப்பார்கள்.

அறநிலையத் துறை வரலாற்றில் ஒரு முதல்வர் அதன் தலைமை நிலையத்திற்கு-முதன்முதலில் அறநிலையத் துறை 1959 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட பிறகு, நான்கு முறை அறநிலையத் துறை அலுவலகத்திற்கு காலடி வைத்த பெருமை எங்கள் முதல்வர் அவர்களைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு மட்டுமல்ல, ஒரு முறையா, இருமுறையா என்பது மாத்திரமல்ல...

100 நிகழ்ச்சிகளில் பங்கேற்ற முதல்வர்!

அறநிலையத் துறையின் 74 ஆண்டுகால வரலாற்றில் முதலமைச்சர் அவர்கள் கலந்துகொண்ட நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? இதுவரையில் 100 நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு சதமடித்த ஒரே முதல்வர் தமிழக முதல்வர் ஒருவராகத்தான் இருக்கமுடியும். அந்த 100 நிகழ்ச்சிகளையும் புத்தகமாக வழங்கியிருக்கின்றோம்.

முதல்வரின் காலம் நூற்றாண்டுகளின் காலம்!

100 என்பது எங்கள் முதல்வரின் வாழ்க்கையில் பின்னிப்பிணைந்த ஒன்று. ஆம், அவர் காலம் நூற்றாண்டுகளின் காலம். ஆம், அவர் காலம் நூற்றாண்டுகளின் காலம். முத்தமிழறிஞர் கலைஞருக்கு நூற்றாண்டு விழா; இனமான பேராசிரியர் பெருந்தகைக்கு நூற்றாண்டு விழா; நடமாடும் பல்கலைக்கழக நாவலருக்கு நூற்றாண்டு விழா; வாலிப பெரியார் ஏ.வி.பி. ஆசைத்தம்பிக்கு நூற்றாண்டு விழா; தோழர்களின் இரும்பு மனிதர் சங்கரய்யா வாழும் காலத்திலேயே அவருக்கு நூற்றாண்டு விழா; வாழும் விடுதலைப் போராட்ட வீரர் தோழர் நல்லகண்ணுக்கு நூற்றாண்டு விழா; வைக்கம் போராட்டத்தின் சமூக நீதிக்கு நூற்றாண்டு விழா. இப்படி பல நூற்றாண்டுகளை தன்வசமாக்கிக் கொண்ட எங்கள் முதல்வரின் சாதனைக்கு 2026 ஆம் ஆண்டு நடைபெற உள்ள தேர்தலிலும் மக்கள் நூற்றுக்கு நூறு வெற்றியைத்தருவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த அவையில் நான் ஒன்றைப் பதிவு செய்கிறேன்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த அவையில் நான் ஒன்றைப் பதிவு செய்கிறேன். 2026 ஆம் ஆண்டு தேர்தலுக்குப் பிறகு, கூடுகின்ற சட்டமன்றக் கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறையினுடைய

மானியக் கோரிக்கையை, நிச்சயமிட்டுச் சொல்கிறேன், நம் திராவிட மாடல் முதல்வர் தலைமையிலே அமைந்திருக்கின்ற இந்த ஆட்சியில் இருக்கின்ற ஓர் அமைச்சர்தான் இந்து சமய அறநிலையத் துறையினுடைய மானியக் கோரிக்கையை 2026 ஆம் ஆண்டு வாசிப்பார் என்று தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எதிரிகளின் சக்கர வியூகத்தில் சிக்குகின்ற அபிமன்யு அல்ல எங்கள் முதல்வர். எதிரிகளின் சக்கர வியூகத்தில் சிக்குகின்ற அபிமன்யு அல்ல எங்கள் முதல்வர். விரல் சக்கரத்தால் வியூகங்களை உடைக்கும் கிருஷ்ண பரமாத்மாவை போன்றவர் எங்கள் முதல்வர். விரல் சக்கரத்தால் வியூகங்களை உடைக்கும் கிருஷ்ண பரமாத்மாவை போன்றவர் எங்கள் முதல்வர்.

"நான் என்ன ஆயுதம் எடுக்க வேண்டும்

என்பதை என் எதிரிதான் தீர்மானிக்கிறான்"

என்றார் புரட்சியாளர் மாவோ.

"நான் என்ன ஆயுதம் எடுக்க வேண்டும்

என்பதை என் எதிரிதான் தீர்மானிக்கிறான்"

என்றார் புரட்சியாளர் மாவோ.

எங்கள் முதல்வர் கையில் உயர்த்திப் பிடிப்பது சமூக நீதி என்னும் வேலாயுதம்; எங்கள் முதல்வர் கையில் உயர்த்திப் பிடிப்பது சம நீதி என்னும் சூலாயுதம்; எங்கள் முதல்வர் கையில் உயர்த்திப் பிடிப்பது சமத்துவம் என்னும் பேராயுதம்; எல்லோர்க்கும் எல்லாம் என்னும் சக்ராயுதம்; தமிழ்நாடு போராடும்; தமிழ்நாடு வெல்லும் என்னும் முழக்கமே எங்கள் முதல்வரின் போர் ஆயுதம்; எங்கள் முதல்வரின் போர் ஆயுதம்; (மேசையைத் தட்டும் ஒலி) இத்தனை ஆயுதங்களோடு எங்கள் முதல்வரின் சமூக நீதிப் போராட்டம் வெல்லும்! வெல்லும்! வெல்லும்! (மேசையைத் தட்டும் ஒலி)

> எங்கள் முதல்வரின் பொற்கால ஆட்சியைப் பற்றி கம்பர் இருந்திருந்தால், திராவிட காவியம் செய்திருப்பார்; வள்ளுவர் இருந்திருந்தால், புதுக்குறள் புனைந்திருப்பார்; இளங்கோ இருந்திருந்தால், சமூக நீதி காப்பியம் வடித்திருப்பார்; பாரதியார் இருந்திருந்தால், புதுக்கவிதை ஆயிரம் பாடியிருப்பார்; பாரதிதாசன் இருந்திருந்தால், கொள்கை விளக்கு இயற்றியிருப்பார்; பெரியார், அண்ணா, கலைஞர் இருந்திருந்தால், கைதட்டி ஆரவாரம் செய்திருப்பார்கள்.

இந்த ஆட்சி அறநிலையத் துறைக்கு என்ன செய்தது என்று பலர் கேட்கிறார்கள். கேட்பவர்களுக்கு சொல்கிறேன். இந்த ஆட்சியில்தான் அரசு நிதியாக இதுவரை இல்லாத அளவிற்கு 1,006 கோடி ரூபாயை அரசின் சார்பில் வாரி வழங்கிய வள்ளல் எங்கள் முதல்வர் அவர்கள் என்பதை இந்த நேரத்தில் நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். என்ன கொடுப்பான், ஏது கொடுப்பான், என்ன கொடுப்பான், எவை கொடுப்பான் என்று இவர்கள் எண்ணுமுன்னே பொன்னும் கொடுப்பான், பொருளும் கொடுப்பான் போதாது போதாதென்றால் இன்னும் கொடுப்பான், இவையும் குறைவென்றால் தன்னையும் கொடுப்பான், தயாபரனே-வாழும் கர்ணனாக இருப்பவரே எங்கள் முதல்வரே வாழிய நீவீர் பல்லாண்டு, பல்லாண்டு, பல்லாண்டு, பல்லாயிரத்தாண்டு என்று கூறிக் கொள்கிறேன்.

என் உரையை நிறைவு செய்வதற்கு முன்னாள் இந்த உரையைத் தயாரிப்பதற்கு உதவியாக இருந்த தலைமைச் செயலாளர் என். முருகானந்தம், அவர்களுக்கும், சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க. மணிவாசன் அவர்களுக்கும், நிதித் துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன் அவர்களுக்கும், இந்து சமய அறநிலையத் துறையின் ஆணையர் பி.என். ஸ்ரீதர், அவர்களுக்கும், இந்தத் துறையை கடந்த காலங்களில் முன்னெடுத்த இத்துறையின் முன்னாள் முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தரமோகன், அவர்களுக்கும், இத்துறையின் முன்னாள் ஆணையர் ஜெ. குமரகுருபரன், அவர்களுக்கும், இத்துறையின் முன்னாள் ஆணையர் க.வீ. முரளீதரன் அவர்களுக்கும், இந்நாள் கூடுதல் ஆணையர் (நிர்வாகம்) மருத்துவர். சி. பழனி, அவர்களுக்கும், தலைமை பொறியாளர் பொ. பெரியசாமி அவர்களுக்கும், கூடுதல் ஆணையர் (விசாரணை) திருமதி. ந.திருமகள் அவர்களுக்கும், கூடுதல் ஆணையர் (கல்வி மற்றும் தொண்டு நிறுவனங்கள்) திருமதி எஸ். ஹரிப்ரியா அவர்களுக்கும், கூடுதல் ஆணையர் (பொது) திருமதி மா. கவிதா அவர்களுக்கும், கூடுதல் ஆணையர் (தலைமையிடம்) சி. லட்சுமணன் அவர்களுக்கும், கூடுதல் ஆணையர் (திருப்பணி) பொ. ஜெயராமன் அவர்கள் உட்பட அனைவருக்கும் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு இந்தத் துறையின்மீது நான் அளித்த பதில்களும், அறவிப்புகளும், ஓரளவிற்கு உறுப்பினர்கள் நிறைவடைவார்கள் என்ற நம்பிக்கையோடு அஞ்சுவது யாதொன்றும் இல்லை;

அஞ்சுவது யாதொன்றும் இல்லை, இனி அஞ்சத் தேவையும் இல்லை என்ற போக்கோடு, நிமிர்ந்த நடையோடு, நேர்கொண்ட பார்வையோடு, எதிர்ப்பு எதுவரினும் அஞ்சாமல் தமிழகத்தைக் காக்கும் காவல் தெய்வம் எங்கள் தளபதியின் பின்னால் நிற்போம் உறுதியாக! நிற்போம் உறுதியாக! என்று கூறி, (மேசையைத் தட்டும் ஒலி) உறுப்பினர்கள் தாங்கள் அளித்த வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக உறுப்பினர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

பசி வயிற்றைச் சூழ்ந்திருந்தாலும், திரளான சட்டமன்ற உறுப்பினர்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மற்றும் குறுக்கிட வேண்டுமென்பதற்காகக் குறுக்கிட்ட எதிர்க்கட்சியைச் சார்ந்த துணைத் தலைவர் உட்பட அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு உரையாற்றினார்.

ஒன்றிய - மாநில அரசுகளின் உறவுகள் குறித்து ஆராய

உயர்மட்டக் குழு அமைத்த முதல்வர் மு.க.ஸ்டாலினுக்குப் பாராட்டு!

'ப்ரீ பிரஸ் ஜர்னல்' ஆங்கில நாளேடு தலையங்கம்!

மும்பை, ஏப். 19 -

மும்பையில் இருந்து வெளியாகும் 'ப்ரீ பிரஸ் ஜர்னல்' ஆங்கில நாளேட்டில் வெளியான தலையங்கத்தில், ஒன்றிய - மாநில அரசுகளின் உறவு குறித்து ஆராய நீதியரசர் குரியன் ஜோசப் தலைமையில் உயர்மட்டக் குழு அமைத்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசின் நடவடிக்கை பாராட்டுக்குரியது என்று குறிப் பிட்டுள்ளது.

THE FREE PRESS JOURNAL NARAYANASAMY

A timely debate on federalism

Tamil Nadu's move to form a high-level committee on centre-state relations headed by former Supreme Court judge Kurian Joseph is a resolute move aimed at consolidating its legacy as a standard bearer for state autonomy. Having won a landmark victory in the Supreme Court against discretionary exercise of powers by state governors, the DMK government has doubled down and ordered a fundamental review of Union and state powers that will have salience in a fast-growing market economy. The south clearly has a better record of economic growth and social development, but Tamil Nadu nurses the grievance that it suffers discrimination in fiscal transfers for ideological reasons. For the Narendra Modi-led NDA government, the recent developments are a major political setback. The reverse that Tamil Nadu governor R.N. Ravi suffered in the Supreme Court led to unprecedented authority flowing to the state government, which could notify ten laws using the principle of deemed assent. The order has infused fresh energy into the long struggle waged by Kerala, where too legislation has been unjustifiably held up because the governor referred bills to the President or sat on

கூட்டாட்சி பற்றிய சரியான நேரத்தில் விவாதம் என்ற தலைப்பில் ப்ரீ பிரஸ் ஜர்னலில் வெளியான தலையங்கம் வருமாறு:-

முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி குரியன் ஜோசப் தலைமையில் ஒன்றியமாநில உறவுகள் குறித்த உயர்மட்டக் குழுவை அமைக்க தமிழக அரசு எடுத்த நடவடிக்கை, மாநில சுயாட்சிக்கான ஒரு தரநிலையாக அதன் பாரம்பரியத்தை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு உறுதியான நடவடிக்கையாகும்.

மாநில ஆளுநர்கள் விருப்பப்படி அதிகாரங்களைப் பயன்படுத்துவதற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் ஒரு மைல்கல் வெற்றியைப் பெற்றுள்ள திமுக அரசு, வேகமாக வளர்ந்து வரும் சந்தைப் பொருளாதாரத்தில் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றியமற்றும் மாநில அதிகாரங்களை அடிப்படையாக மறுபரிசீலனை செய்ய உத்தரவிட்டுள்ளது, தென்னகம் பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக வளர்ச்சியில் சிறந்த பதிவைக் கொண்டுள்ளது என்பது தெளிவாகிறது.

ஆனால் சித்தாந்த காரணங்களுக்காக நிதி பரிமாற்றங்களில் பாகுபாட்டை அனுபவிக்க வேண்டியுள்ளது குறையை தமிழ்நாடு கொண்டுள்ளது. நரேந்திர மோடி தலைமையிலான NDA அரசாங்கத்திற்கு, சமீபத்திய முன்னேற்றங்கள் ஒரு பெரிய அரசியல் பின்னடைவு. உச்ச நீதிமன்றத்தில் தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி அனுபவித்த தலைகீழான முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அதிகாரம் மாநில அரசுக்குப் வழிவகுத்தது, இது கருதப்பட்ட ஒப்புதல் கொள்கையைப் பயன்படுத்தி பத்து சட்டங்களை அறிவிக்க முடியும்.

கேரளா நடத்திய நீண்ட போராட்டத்திற்கு இந்த உத்தரவு புதிய சக்தியை அளித்துள்ளது. ஆளுநர் மசோதாக்களை ஜனாதிபதியிடம் பரிந்துரைத்ததாலோ அல்லது அவற்றின் மீது அமர்த்தியதாலோ சட்டங்கள் நியாயமற்ற முறையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

1969 ஆம் ஆண்டு பி.வி. ராஜமன்னார் குழுவை அமைத்து, 1974 ஆம் ஆண்டு முதலமைச்சர் கலைஞர் தலைமையில் சட்டமன்றத்தில் மாநில சுயாட்சி மற்றும் உரிமைகள் குறித்து ஒரு தீர்மானத்தை நிறை வேற்றியதன் மூலம், தமிழ்நாடு மாநில சுயாட்சியை வலியுறுத்தும் வரலாற்றைக் கொண்டுள்ளது. முதலமைச்சர் மு.க. ஸ்டாலினின் புதிய குழு, எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களை அதிக அரசியல் மற்றும் நிதி சுயாட்சியைப் பெறவும், தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசாங்கத்தின் மையப்படுத்தும் போக்குகளுக்கு எதிராகத் தள்ளவும் தூண்டும் ஒரு அறிக்கையை முன்வைக்கும்.

குரியன் ஜோசப் குழுவின் அரசியலமைப்பு, தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் 2020 ஆம் ஆண்டு தேசிய கல்விக் கொள்கையை அதன் மும்மொழி சூத்திரத்துடன் ஏற்றுக்கொள்ளவும், 200வது பிரிவை ஆயுதமாகப் பயன்படுத்திய ஆளுநர்களை பணிநீக்கம் செய்யவும் ஒரு தசை அணுகுமுறையைத் தேர்ந்தெடுத்த ஒன்றியஅரசுக்கு ஒரு கணக்கீட்டு தருணமாகும்.

தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா போன்ற தென் மாநிலங்கள் தங்கள் வரிகளில் இருந்து ஒரு பெரிய பொருளாதார உற்பத்தி மூலம் நியாயமான பங்கைப் பெறுகின்றனவா என்ற நியாயமான கேள்வியும் உள்ளது. தமிழ்நாடு ஒவ்வொரு ரூபாய் வரிக்கும் 29 பைசா மட்டுமே திரும்பப் பெறுகிறது என்று ஸ்டாலின் வருத்தம் தெரிவித்துள்ளார்.

ஜிஎஸ்டி கவுன்சிலின் அமைப்பு மற்றும் மாநிலங்களின் பலவீனமான செல்வாக்கு ஆகியவை பிற எரிச்சலூட்டும் விஷயங்களாகும். சுகாதாரம், சட்டம் மற்றும் நிதி போன்ற பாடங்கள் மாநிலப் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும் என்றும், கல்வி மற்றும் அதன் மூலம் கலாச்சாரத்தின் மீதான கட்டுப்பாட்டிற்கு எதிராக தடுப்புகள் அமைக்கப்பட வேண்டும் என்றும் தமிழ்நாடு விரும்புகிறது. இந்தக் கோரிக்கைகள் ஒரு இணக்கமான ஒன்றியத்திற்கு மையமாக உள்ளன.

மேலும் 2026 ஆம் ஆண்டில் மாநிலத்தில் நடைபெறவிருக்கும் தேர்தலுக்கு முன்னதாக, குழுவின் இடைக்கால அறிக்கை வெளியிடப்படும் போது வேகமாக வளரும். சர்க்காரியா மற்றும் புஞ்சி குழுக்களிலிருந்து செயலற்ற நிலையில் இருக்கும் விவாதம் புதிய இழுவைப் பெறும், மேலும் அது கூட்டாட்சி முறையை வலுப்படுத்த உதவும்.

இவ்வாறு தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்புதான் அனைத்தையும்விட உயர்ந்தது என்பதை மறந்துவிடக் கூடாது!

துணை குடியரசுத் தலைவர் ஜக்தீப் தங்கரின் கருத்துக்கு - கழக துணைப் பொதுச்செயலாளர் திருச்சி சிவா கண்டனம்!

புதுடெல்லி, ஏப். 19 -

அரசியலமைப்பின் அடிப்படையில் பிரிக்கப்பட்ட அதிகாரங்களின் படி நிர்வாகம், சட்டமன்றம்/நாடாளுமன்றம் மற்றும் நீதித்துறை ஆகியவை தனித்தனி அதிகாரங்களைக் கொண்டுள்ளன. இதன் அடிப்படையில் இம்மூன்று துறைகளும் அவரவர் துறைகளில் இயங்கினாலும் அரசியலமைப்பு தான் அனைத்தையும் விட

உயர்ந்தது என்பதை ஒருவர் மறந்துவிடக் கூடாது.

ஆளுநர்கள் மற்றும் குடியரசுத்தலைவர்களின் பங்கு என்ன என்பது குறித்து உச்சநீதிமன்றம் அரசியலமைப்பு சட்ட பிரிவு 142 ஐ பயன்படுத்தி சமீபத்தில் தெளிவு படுத்தி உள்ளது. அதில் அரசியலமைப்பு அதிகாரம் என்ற பெயரில் எந்தவொரு தனி நபரும் சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களை காலவரையின்றி நிறுத்தி வைக்க முடியாது என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி நிறுவியுள்ளது.

இந்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பு குறித்த துணைக் குடியரசுத் தலைவர் ஜக்தீப் தங்கரின் கருத்துகள் நெறிமுறையற்றவை! இந்திய ஒன்றியத்தில் "சட்டத்தின் ஆட்சி" தான் நடக்கிறது என்பதை ஒவ்வொரு குடிமகனும் அறிந்திருக்க வேண்டும் என திருச்சி சிவா எம்.பி. கண்டனம் தெரிவித்துள்ளார்.

கோடை விடுமுறை தொடக்கம்!

மாணவர்களுக்கு - பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவுரை!

சென்னை, ஏப். 19 -

தமிழகத்தில் தொடக்கப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு கோடை விடுமுறை தொடங்கியுள்ள நிலையில், மாணவர்களின் உடல் நலன் குறித்தும், விடுமுறையைப் பயனுள்ள வகையில் கழிப்பது குறித்தும் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பல்வேறு அறிவுரைகளை வழங்கியுள்ளார்.

தமிழகத்தில் அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் தொடக்க, நடுநிலைப் பள்ளிகளில் 1 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு ஆண்டு இறுதித் தேர்வு ஏப்.7ஆம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. இதில் 1 முதல் 3ஆம் வகுப்பு பயிலும் குழந்தைகளுக்கு ஏப்.11ஆம் தேதியுடன் தேர்வுகள் முடிந்து விட்டன.

தொடர்ந்து 4 மற்றும் 5ஆம் வகுப்புகளுக்கு வியாழக்கிழமை தேர்வுகள் நிறைவடைந்தன. அதைத் தொடர்ந்து மாணவர்களுக்கு கோடை விடுமுறை விடப்பட்டுள்ளது.

அதேவேளையில், விடைத்தாள் மதிப்பீடு மற்றும் அடுத்த கல்வி யாண்டுக்கான மாணவர் சேர்க்கை போன்ற நிர்வாகப் பணிகளை கவனிப்பதற்காக, அனைத்து ஆசிரியர்களும் பள்ளிக்கு ஏப்.30 ஆம் தேதி வரை வர வேண்டும்.

ஆண்டு இறுதித் தேர்வின் தேர்ச்சி அறிக்கைக்கு ஏப்.30ஆம் தேதிக்குள் அந்தந்த வட்டாரக் கல்வி அலுவலர்களிடம் அனைத் துப் பள்ளிகளும் ஒப்புதல் பெற வேண்டும் என அறிவுறுத்தப்பட் டுள்ளது.

இந்நிலையில், மாணவர்கள் விடுமுறையை பயனுள்ள வகையில் கழிப்பது குறித்து துறையின் அமைச்சர் அன்பில் மகேஸ் பல்வேறு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார். இது குறித்து அவர் 'எக்ஸ்' தளத்தில் வியாழக்கிழமை

வெளியிட்ட பதிவில் கூறியிருப் பதாவது:

பள்ளிமாணவர்களுக்கான இறுதித்தேர்வு நிறைவுற்று கோடை விடுமுறை தொடங்குகிறது. கோடை விடுமுறையை மாணவச் செல்வங்கள் பயனுள்ள வகையில் கழிக்க வேண்டும். தங்களின் உடல்நலத்தில் கவனம் செலுத்த வேண்டும். தண்ணீர் அதிகம் பருகுங்கள். சிறுவர்களுக்கான புத்தகம் வாசியுங்கள். பாதுகாப்பான பயணம் மேற்கொள்ளுங்கள்.

அருங்காட்சியகம், பூங்கா செல்லுங்கள். திறமைகளுக்கு ஏற்ற பயிற்சிவகுப்புகளுக்கு செல்லுங்கள். பெற்றோர்கள் அனுமதிஇல் லாமல் ஆபத்தான இடங்களுக்குச் செல்வதை தவிர்க்க வேண்டுகிறேன். மகிழ்ச்சியான மனதோடு அடுத்த வகுப்புக்கு வாருங்கள்.

உங்களை வரவேற்க காத்திருக்கிறோம் எனத் தெரிவித்துள்ளார். 6-8 வகுப்புகளுக்கு 1- 5ஆம் வகுப்புகளுக்கு கோடை விடுமுறை தொடங்கியுள்ள நிலையில், 6-8ஆம் வகுப்பு மாண வர்களுக்கு முழு ஆண்டுத் தேர்வுகள் தற்போது நடைபெற்று வருகின்றன. தொடர்ந்து, ஏப்.24ஆம் தேதி தேர்வுகள் நிறை வடையவுள்ளன. இதையடுத்து இந்த வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கு ஏப்.25ஆம் தேதி முதல் கோடை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.